15th March 1966]

பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள்

*294 கேள்வி—திரு. சா. ராமசாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள விஸ்தரிப்பு அதிகாரிகளில் சிலரை எடுத்துவிட அரசாங்கத்துக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இவ்விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றது.

திரு. மு. பொ. வடிவேல்: சில ஆசிரியர்கள் கல்வி விஸ்தரிப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எதிர் காலத்தில் அவர்களுக்கு ஏதேனும் ப்ரமோஷன் உண்டா? அவர் களுடைய எதிர்கால நிலை என்ன என்று அறியலாமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: விதிமுறைக்கு இணங்க அவர் களுக்கு ப்ரமோஷன் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன்.

திரு. சா. ராமசாமி: இந்தப் பிரச்னை பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எப்பொழுது பரிசீலனை முடிவடைந்து, முடிவு அமலாக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பரிசீலனை முடித்தவுடனேயே முடிவுகள் அறிவிக்கப்படும்.

Compulsory donation

*295 *Q.*—SRI M. KALYANASUNDARAM:
SRI M. KARUNANITHI:
SRI S. MADHAVAN:
SRI T. P. ALAGAMUTHU: } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any complaints regarding compulsory "donations" collected by Private Educational Institutions for new admission; and

(*b*) if so, the steps taken to prevent such collections?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) There are already instructions prohibiting collection of any sum other than special fees at the time of admission. When specific allegations of compulsory collection of amounts are received, action will be taken against those concerned by the Education Department.

திரு. செ. மாதவன்: கட்டாய வசூல் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது புதிய சட்டப்படி பள்ளி சம்பளம் இல்லாத சூழ்நிலை உருவாகி இருக்கிற காரணத்தினால், மறைமுகமாக நன்கொடை வசூல் செய்வதில்